2022 ஜனவரி 7]

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. விதி 110–ன்கீழ் அறிக்கை

சேலம், நாமக்கல் மாவட்டங்கள், விடுபட்ட விவசாயிகளுக்கு பயிர்க் கடன் தள்ளுபடி சான்றுகள் வழங்குதல் மற்றும் மீண்டும் தொடர்ந்து பயிர்க் கடன் வழங்குதல் குறித்த கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு விதி 110–ன்கீழ் இந்த அறிவிப்பை வழங்கிட விரும்புகிறேன்.*

கடந்த ஆண்டு 2020–2021–ல் பயிர்க் கடன் வழங்குவதற்காக ரூ.11,000 கோடி குறியீடு நிர்ணயிக்கப்பட்டது. இதில் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் பயிர்க் கடன் வழங்குவதற்காக நிர்ணயிக்கப்பட்ட குறியீடு முறையே ரூ.746 கோடி மற்றும் ரூ.534 கோடி ஆகும். இதில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எய்தியது ரூ.614.92 கோடி மற்றும் ரூ.502.62 கோடி ஆகும். பயிர்க் கடன் என்பது விவசாயிகள் பயிர் செய்வதற்காக மட்டும் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு பயிருக்கும் ஒரு ஏக்கருக்கு எவ்வளவு தொகை பயிர்க் கடனாக வழங்கப்பட வேண்டும் என்பது ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்டத் தொழில்நுட்பக் குழுவால் கலந்தாலோசித்து முடிவு செய்யப்பட்டு, குழுவின் பரிந்துரைகள் மாநில தொழில்நுட்பக் குழுவிற்கு அனுப்பப்பட்டு, மாநில தொழில்நுட்பக் குழுவால் ஏற்பளிக்கப்படும் கடன் தொகை அளவின் அடிப்படையில், scale of finance–*பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.*

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களைப் பொறுத்தவரையில், பெருவாரியாக சோளம் மற்றும் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்பட்டு வரும் நிலையில், இப்பயிர்களுக்கு ஒரு ஏக்கருக்கு வழங்கப்படும்

[திரு. இ. பெரியசாமி] [2022 ஜனவரி 7

கடன் தொகை மிகவும் குறைவு என்பதால், பயிர்க் கடன் அளவு அதிகம் உள்ள மஞ்சள் மற்றும் வாழை போன்ற பயிர்களைக் குறிப்பிட்டு கிராம நிருவாக அலுவலர்களிடமிருந்து சிட்டா, அடங்கல் பெறாமல் கடன்பெறும் விவசாயிகளே சுய உறுதிமொழி அளித்து கடன் பெற்றுள்ளது கள ஆய்வின்போது கண்டறியப்பட்டுள்ளது. மேலும், சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் விவசாயிகள் தங்களது சுய உறுதிமொழியில் கூடுதலான பரப்பில் பயிர் செய்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளனர். இந்த விவரங்கள் அடங்கலில் உள்ள விவரங்களுக்கு மாறாக உள்ளன. இதுபோன்ற விதிமீறல்கள் பிற மாவட்டங்களில் நடைபெற்றிருப்பினும், இவ்வகையான இரண்டு விதிமீறல்களில் 97% அதாவது, மொத்தம் ரூ.516.92 கோடி, ரூ.501.69 கோடி இவ்விரு மாவட்டங்களில் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளது.

முற்பகல் 10–55

இந்நிலையில் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பயிர்க் கடன் தள்ளுபடி அறிவிக்கப்பட்டு, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் 1,11,833 விவசாயிகளுக்கு தள்ளுபடி சான்று வழங்கப்பட்டு, 51,017 நபர்களுக்கு மேற்கூறிய இரண்டு விதிமீறல்களால் தள்ளுபடி சான்று வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளதால் விவசாயிகளுக்கு மீண்டும் பயிர்க் கடன் வழங்கப்படாமலும், பயிர்க் கடன் வழங்க நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டினை எய்த முடியாமலும் வழக்கமான வேளாண் பணிகளில் ஒரு தொய்வு நிலையும் ஏற்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 5–1–2022 அன்று சேலம் மற்றும் நாமக்கல் மண்டலங்களிலிருந்து விவசாயப் பெருமக்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, இதுகுறித்து முறையிட்டு தங்களுக்கு நடப்பாண்டில் தொடர்ந்து பயிர்க் கடன் வழங்கவும், மற்ற விவசாயிகளுக்கு வழங்கப்பட்டதுபோல, தங்களுக்கும் பயிர்க் கடன் தள்ளுபடி வழங்க வேண்டுமென்றும் கோரிக்கை வைத்தனர். மேலும், பயிர்க் கடன் தள்ளுபடி அறிவிப்பினைத் தொடர்ந்து, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்கள் உட்பட, இதர மாவட்டங்களிலும் மேற்கண்ட விதிமீறலுக்குட்பட்ட பயிர்க் கடன்களில் பெரும்பான்மையான விவசாயிகளுக்கு தள்ளுபடி சான்று தேர்தலுக்கு முன்பே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் பணியானது அதிமுக்கியத்துவம் வாய்ந்த பணியாக உள்ளதாலும், விதிகளின்படி

2022 ஜனவரி 7] [திரு. இ. பெரியசாமி]

கடன் வழங்க வேண்டியது சங்கத்தின் பணி என்பதையும் கருத்தில் கொண்டு, இவ்வகையான விதிமீறல்கள் இனி நடைபெறாவண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை உறுதிசெய்து, விவசாயிகளின் நலனை முன் நிறுத்தி, இப்பகுதி விவசாயிகளின் கோரிக்கையை பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்நிகழ்வினை சிறப்பினமாகக் கருதி, மேற்கூறிய விவசாயிகளுக்கு பயிர்க் கடன் தள்ளுபடி சான்றுகளை வழங்கலாமெனவும், அவர்களுக்கு மீண்டும் தொடர்ந்து பயிர்க் கடன் வழங்கவும் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உள்ள 51,017 விவசாயிகளுக்கு ரூ.501.69 கோடி அளவிற்கு பயிர்க் கடன் தள்ளுபடி வழங்கப்படும் என்பதையும், அவர்களுக்கு நடப்பாண்டில் மீண்டும் பயிர்க் கடன் வழக்கம்போல தொடர்ந்து வழங்கப்படும் என்பதையும் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இனிவருங்காலங்களில் இத்தகைய தவறுகள் நிகழாதவண்ணம் உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இன்று பொதுக் கணக்குக் குழு ஆரம்பித்த நூற்றாண்டை நெருங்க இருக்கிறோம். மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தில் ஏற்படுத்தப்பட்ட பொதுக் கணக்குக் குழு 1921 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. முதன்முதலில் அந்தக் குழுவின் தலைவராக Thiru W.M. Hailey அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். கடந்த நவம்பர் மாதம் 2021 ஆம் ஆண்டு பாராளுமன்றத்திலே நடைபெற்ற விழாவில் மேதகு குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த், மேதகு துணை குடியரசுத் தலைவர் திரு. வெங்கையா நாயுடு, மாண்புமிகு மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா அவர்களும் கலந்து கொண்டார்கள். இந்தியாவிலுள்ள அனைத்துக்